# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

### O.S. 80/2023

## CNR.No.TNCB19000

Date: 10.11.2025 PW2

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. கார்த்திகேயன் | **வயது** | 34 |
| **த/பெ** | விஸ்வநாதன் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | தெலுங்குபாளையம் | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 10th day of November 2025

வா.சா.2 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் அன்னூர் தெலுங்குப்பாளையத்தில் குடியிருக்கிறேன். மேட்டுப்பாளையத்தில் இருந்து தெலுங்குப்பாளையம் சுமார் 30 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் 20 கிலோமீட்டர் தூரம் இருக்கும். நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க சம்மன் வந்ததா? என்றால் இல்லை. வாதி சொன்னதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்தவழக்கின் பிரதிவாதிகள் பெயரை சொல்ல முடியுமா என்றால் என்.கே. கோபால கிருஷ்ணன். சதிஷ். மரகதமணி,கௌரி பிரதீப். வாதி மேற்கண்ட நான்கு நபர்களின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையெழுத்தை நீதிமன்றத்தில் வைத்து செய்தேன். முதல்விசாரணை வாக்குமூலம் நீதிமன்றத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை எங்கு வைத்து தயார் செய்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றால் வாதியின் வழக்கறிஞர்

அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தையும் வாதியின் வழக்கறிஞரின் அலுவலகத்தில் வைத்து செய்தேன் என்றால் சரிதான். என்.கே.கோபால் மற்றும் பிரதிவாதிகள் எங்கே குடியிருக்கிறார்கள் என்றால் புளியம்பட்டியில் குடியிருக்கிறார்கள்.

புளியம்பட்டி ஈரோடு மாவட்டத்தில் உள்ளது என்றால் சரிதான். மேட்டுப்பாளையத்திற்கும் புளியம்பட்டிக்கும் சுமார் 40 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். என்.கே.கோபால் உயிருடன் உள்ளாரா? என்றால் இறந்துவிட்டார். என்.கே. கோபால் எந்த தேதியில் இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. என்.கே.கோபால் இறந்த தேதியை வாதி சொல்லி முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். என்.கே.கோபால் எவ்வாறு இறந்தார் என்றால் உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். என்.கோ.கோபால் குறிப்பிட்டு எதனால் இறந்தார் என்று எனக்கு தெரியாது. என்.கோ.கோபால் எனக்கு பழக்கம் இல்லை. தூரத்து சொந்தம்.

இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கும் என்.கோ.கோபாலுக்கும் என்ன உறவு முறை என்றால் மரகதமணி அவருடைய மனைவி ஆவார். கௌரி அவரது மகள். சதிஷ் அவரது மகன். கௌரி, சதிஷ் இருவரும் மரகதமணிக்கு பிறந்தவர்களா? என்றால் இல்லை முதல் மனைவி ஈஸ்வரிக்கு பிறந்த குழந்தைகள். மரகதமணி என்.கே. கோபாலுக்கு சட்டப்படியான மனைவியல்ல என்றால் சரியல்ல. மரகதமணிக்கு எதிராக சதிஷ்மற்றும் கௌரி இடையே சத்திய மங்கலம் மற்றும் கோபி நீதிமன்றங்களில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. 10.05.2020 அன்று மத்திய அரசால் கோவிட் தொற்று இருந்தால் ஊரடங்கு அமலில் இருந்தது என்றும் அன்றைய தினம் நான் மேட்டுப்பாளையத்திற்கு வந்திருக்க வாய்ப்பில்லை என்றால் தளர்வுகள் இருந்தது மே மாதத்திற்கு பிறகு தான் முழு ஊரடங்கு நிலுவையில் இருந்தது.

நான் சொல்வது தவறு என்றும் மார்ச் மாதத்திலிருந்தே ஊரடங்கு நிலுவையில் இருந்தது என்றால் சரியல்ல. மத்திய அரசு 04.05.2020 முதல் 17.05.2020 வரை GAZATTE Notification -ல் முழு ஊரடங்கு நிலுவையில் இருந்தது என்றால் தளர்வுகள் இருந்தது. GAZATTE Notification -ல் உள்ளது. நான் சொல்வது போல் 10.05.2020 ம் தேதி முழு அடைப்பு இருந்த தேதி என்பதால் அன்றைய தினம் நாடு முழுவதும் யாரும் வீட்டை விட்டு வெளியே வரமுடியாது என்றால் சரியல்ல. அதோடு 20 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த நான் மேட்டுப்பாளையத்திற்கு வரக்கூடிய சாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. அதை போல் கோபால் 40 கிலோ மீட்டர் தூத்திற்கு அப்பால் உள்ளதால் அவரும் வர வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. ஊரடங்கு நிலுவையில் இருந்த சமயம் E. Pass நடைமுறை உள்ள விபரம் தெரியுமா? என்றால் தெரியும் இரு சக்கர வாகனத்திற்கு pass இல்லை நான்கு சக்கர வாகனத்திற்கு மட்டும் தான் pass இருந்தது என்றால் சரிதான்.

இரு சக்கர வாகனத்தில் செல்வதற்கான pass இருந்ததை சொல்ல முடியுமா என்றால் முடியாது. நான் சொல்வதுபோல் 10.05.2020 அன்று எந்தசம்பவமும் நடைபெற வில்லை என்றும் வாதி எனது உறவினர் என்பதால் அவருக்காக வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கண்ணால் பார்த்ததை சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் சத்திய பிரமாண வாக்குமூலத்தின் 2 வது பத்தியில் தாவா படி தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். வாதி எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் நான் எந்த பரிகாரமும் கேட்க அருகதை இல்லை என்றால் சரியல்ல. வாதி என்ன வேலை செய்கிறார் என்றால் ஐ.டி யில் வேலை செய்கிறார். வாதி பைனான்ஸ் தொழில் செய்யவில்லை.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.11.14 19:13:52 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.